செய்தி வெளியீடு எண்: 346/2017 நாள்: 15.06.2017

**ஒவ்வொரு தனிமனிதனும் முதலில் தன்னுடைய வீட்டிலிருந்து சுற்றுப்புற சூழல் மாசுபடுவதை தடுக்க பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்துவதை தவிர்க்க முன் வரவேண்டும்!**

**உலக சுற்றுசூழல் தினத்தையொட்டி இராணிப்பேட்டை பாரத மிகுமின் நிறுவனத்தின் குடியிருப்பு வளாகத்தில் 2017 மரக்கன்றுகளை நடும் பணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்!!**

வேலூர் மாவட்ட இராணிப்பேட்டை பாரத மிகுமின் நிறுவன புதிய குடியிருப்பு வளாகத்தில் 2017ஆம் ஆண்டு உலக சுற்று சூழல் தினத்தினை முன்னிட்டு 2017 மரக்கன்றுகள் நடும் திட்டத்தை தொடங்கி வைத்தும் பாரத ரத்னா டாக்டர்.அப்துல்கலாம் பூங்கா அமைப்பதற்கான கல்வெட்டுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பாரத மிகுமின் நிறுவன செயல் அலுவலர் திரு.கே.கலைச்செல்வன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:-

சுற்றுசூழல் தினம் ஆண்டு தோறும் ஜுன் 5 ஆம் தேதி உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. சுற்றுசூழலை காக்க வேண்டிய சூழலில் தற்போது நாம் உள்ளோம். மக்களையும் இயற்கையும் ஒன்று சேர இணைத்து வாழ்க்கையை மேற்கொள்ளும் நிலையில் இருந்து வருகிறோம். சுனாமி, பூகம்பம் போன்ற இயற்கை இடற்பாடுகள் கடந்த காலங்களில் குறைந்த அளவே என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் தற்போது இவைகள் உலகில் ஆங்காங்கே ஏற்பட்டு வருகிறது. இதற்கு காரணம் இயற்கை சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றமே ஆகும். இவைகளை உணர்ந்து நம் மனிதகுலம் இயற்கையை மாசுபடுத்துவதை தவிர்க்க வேண்டும். மனிதன் சுற்றுசுழல் மாசுபடுத்துவதை தவிர்க்கும் குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு தன்னுடைய வீட்டிலிருந்தே சுற்று சூழலுக்கு எதிரான பிளாஸ்டிக் பொருட்களை தவிர்த்தல், காற்று மாசுபடுதலை தவிர்த்தல், நீர் மாசுபடுதலை தவிர்த்தல், தண்ணீர் வீணாக்குவதை தவிர்த்தல் போன்ற குணங்களை வளர்த்துக் கொண்டு சுற்றுசூழலுக்கும் இயற்கைக்கும் உற்ற நண்பனாக இருக்க வேண்டும்.

தமிழகத்தில் வேலூர் மாவட்டத்தில் கடந்த காலங்களில் ஆறுகள், குளங்கள் மற்றும் ஏரிகளில் சரியான மழைபொழிவினால் நீர் கிடைக்கப்பெற்று வளம் கொழித்த இடமாக இருந்து வந்தது. தற்போது நவீன காலத்தில் தன்னுடைய தேவைக்காக இயற்கையை மனிதன் தன் கையில் கொண்டு வந்ததினால் இவை தற்போது வறண்டு தண்ணீரின்றி உள்ளது. இவைகளை மீண்டும் புணரமைத்து மழை காலங்கில் வரும் நீரை சேமிக்க அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள் தங்கள் நிலத்தை மேம்படுத்திக்கொள்ள ஏரிகளில் வண்டல் மண் எடுக்கும் திட்டம், நீர்வரத்து கால்வாய்களை புணரமைக்க குடிமராமத்து பணிகள் போன்ற திட்டம் செயல்பாட்டில் உள்ளது. இவ்வாறு அரசும் ஒரு புறம் நீர் நிலைகளை மேம்படுத்த திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இதுபோன்று அரசு தொழில் நிறுவனம் மற்றும் தனியார் தொழிற் நிறுவனங்களும் தங்கள் நிறுவனம் அமைந்துள்ள பகுதியின் அருகில் உள்ள ஏதாவது ஒரு ஏரி மற்றும் குளங்களை சமூக பாதுகாப்பு நிதியினை கொண்டு தூர் வார முன்வர வேண்டும்.

இந்த பாரத மிகுமின் நிறுவனமும் அருகில் உள்ள ஏதாவது ஏரியை தூர் வார வேண்டும் என்ற கோரிக்கையை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக கேட்டுக்கொள்கிறேன். இந்தியாவில் 17 இடங்களில் அமைந்துள்ள பாரத மிகுமின் நிறுவனம் இந்தியாவில் மட்டுமல்லாமல் உலக அளவிலும் தன்னுடைய உற்பத்தி பொருட்கள் மூலம் சிறந்து விளங்குகிறது. வேலூர் மாவட்டத்தில் 50 வருடங்களுக்குமேல் இயங்கி வரும் இராணிப்பேட்டை பாரத மிகுமின் நிறுவனம் சிறந்து விளங்குகிறது. இந்த நிறுவனத்தில் உயர்ந்த திறமை, ஒழுக்கம் மற்றும் பணி திறன் கொண்ட பணியாளர்களால் நிறுவனம் சிறந்து இயங்கி வருகிறது. இந்நிறுவன வளாகத்தில் ஏற்கனவே மரங்கள் அதிக அளவில் உள்ளது. தற்போது கட்டப்பட்டுள்ள புதிய பணியாளர் குடியிருப்பு வளாகத்தில் மரங்கள் நடும் விழா சிறப்பாக நடைபெறுகிறது. எதிர்காலத்தில் சிறப்பான பல்வேறு நிலைகளிலும் திறம்பட செயல்பட்டு முன்னேற்ற பாதையில் பாரத மிகுமின் நிறுவனம் முன்னெடுத்து செல்லப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் கோட்ட அலுவலர் திருமதி.ராஜலட்சுமி, துணை காவல் கண்காணிப்பாளர் திரு.விஜயகுமார், வட்டாட்சியர் திருமதி.பிரியா, பாரத மிகுமின் நிறுவன பொது மேலாளர்கள் திரு.செங்கப்பா, திரு.சைரில்.ஆர்.பெர்னான்டஸ், திரு.அனில்குமார், திரு.ரவிக்குமார், துணை மேலாளர் திரு.ஸ்ரீனிவாசராவ், தொழிற்சங்கத் தலைவர்கள் திருமதி.அவுலியா, திரு.சிவக்குமார், திரு.ஸ்டாலின், திரு.ஜாவித் அக்பர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.

15/6/17